# தமிழக செம்மொழி மாநாட்டில் 91 இலங்கையர் பங்கேற்பு

## – கருணாநிதி மகிழ்ச்சி தெரிவிப்பு –



தமிழக முதலமைச்சர் கருணாநிதி மிகவும் அவசரமாக நடத்தும் செம்மொழி மாநாட்டிற்கு பலத்த எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. குறிப்பாக ஈழத்தமிழிரின் இரத்தம் காயமுன்னர், அவர்களின் அழிவைத் தடுக்க முடியாத கருணாநிதி, ஒரு இனத்தைக் காப்பாற்ற முடியாத கருணாநிதி மொழியைக் காப்பாற்ற எதற்காக இத்தனை அவசரப்படுகின்றார் என்ற கேள்விகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும், தனது பதவிக்காலம் முடிவதற்குள் எதாவது செய்யவேண்டும் என்ற அவசரத்தில் உள்ள கலைஞர் கூட்டியுள்ள மாநாட்டில் இலங்கையில் இருந்து தமிழர்கள் கலந்துகொள்ள மாட்டார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், இலங்கையில் இருந்து 91 பேர் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் அறிவித்து பெருமிதப்பட்டுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், தமிழகத்தில் நடைபெறவுள்ள செம்மொழி மாநாட்டில், தமிழாராய்ச்சிக்காக 49 நாடுகளில் இருந்து 7256 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். கோயம்புத்தூரில் நடைபெறவுள்ள இந்த செம்மொழி மாநாட்டில், இலங்கையில் இருந்து 91 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் 1500 பேர் தமது ஆராய்வுகளை மாநாட்டின் போது சமர்ப்பிப்பர் எனக் கூறப்படுகிறது. தமிழக முதல்வர் மு. கருணாநிதி, சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கனடாவில் இருந்து 23 பேரும், அமெரிக்காவில் இருந்து 44 பேரும் , அவுஸ்திரேலியாவில் இருந்து 15 பேரும், பிரித்தானியாவில் இருந்து 18 பேரும், சீனாவில் இருந்து 4 பேரும் கலந்து கொள்கின்றனர். மற்றும் 6,800 பேர் தனிப்பட்ட முறையில் கலந்து கொள்ளவுள்ளனர். இதற்கிடையில் தமிழ் இணைய மாநாட்டுக்காக 75 தொழில்நுட்ப ஆராய்ச்சி ஆக்கங்கள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாநாட்டில் அமெரிக்கா, கனடா, சுவிட்சர்லாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளில் இருந்தும் பலர் கலந்து கொள்ளவுள்ளதாக கருணாநிதி தெரிவித்துள்ளார்.

# ஐ.நா. பாதுகாப்பு ஆணைக்குழுவில் உறுப்பினராக இந்தியாவுக்கு மேலும் 53 நாடுகள் ஆதரவு



ஐ.நா. பாதுகாப்பு ஆணைக்குழுவில் இந்தியா நிரந்தரமில்லாத உறுப்பினராக 53 ஆசிய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. இதையடுத்து ஐ.நா. பாதுகாப்பு ஆணைக்குழுவில் இந்தியா நிரந்தரமில்லாத உறுப்பினராவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு ஆணைக்குழுவில் மொத்தம் 15 உறுப்பினர்களை உள்ளடக்கியது. இதில் அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா, சீனா, ரஷ்யா ஆகிய 5 நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாக உள்ளன. மற்ற 10 நாடுகள் 2 ஆண்டுகள் பதவிக்காலத்தின் அடிப்படையில் நிரந்தரமில்லாத உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

பாதுகாப்பு ஆணைக்குழுவில் நிரந்தரமில்லாத உறுப்பினர் பதவிக்கு ஆசியாவில் இந்தியாவும், கஜகஸ்தானும் போட்டியிட்டன. ஆனால் கஜகஸ்தான் சமீபத்தில் போட்டியில் இருந்து விலகிவிட்டது. இதனால் ஆசியாவில் இருந்து போட்டியிடும் ஒரே நாடாக இந்தியாக உள்ளது. கஜகஸ்தான் போட்டியில் இருந்த போது ஐ.நா. பொது சபையில் இந்தியாவுக்கு ஆதரவாக 122 வாக்குகள் இருந்தன. இந்நிலையில் 53 ஆசிய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளதால் இந்தியாவுக்கு ஆதரவு மேலும் பெருகியுள்ளது என்று இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு ஆணைக்குழுவில் நிரந்தரமில்லாத உறுப்பினராக ஐ.நா. பொது சபையில் உள்ள மொத்த வாக்குகளில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளை (128 வாக்குகள்) பெறுதல் அவசியம்.

# சவுதி அரேபியாவுடன் 9 புதிய உடன்படிக்கைகள் மன்மோகன்சிங் நேரில் செல்கின்றார்



இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் எதிர்வரும் 27ம் திகதி 3 நாள் பயணமாக சவூதி அரேபியா செல்கிறார். அங்கு 9 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன. அவருடன் ஏராளமான இந்திய தொழில் அதிபர்கள் செல்கிறார்கள். ரியாத் நகரில், 28ம் திகதி, சவூதி அரேபிய மன்னர் அப்துல்லாவுடன் மன்மோகன் சிங் பேச்சுவார்த்தை நடத்துகிறார். அப்போது, இருதரப்பு உறவுகள், பிராந்திய, சர்வதேச பிரச்சினைகள், தீவிரவாதம், பாதுகாப்பில் ஒத்துழைப்பு, பாலஸ்தீனம், ஈராக், ஈரான், ஆப்கானிஸ்தான், யேமன் ஆகிய நாடுகளில் நிலவும் சூழ்நிலை ஆகியவை குறித்து இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள்.

இந்த பயணத்தின்போது, இந்தியா - சவூதி அரேபியா இடையே 9 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன. தண்டனை பெற்ற குற்றவாளிகளை பரிமாறிக்கொள்வதற்கான ஒப்பந்தம், விஞ்ஞான துறையில் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சேவைகளில் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் உள்பட 9 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன. 68 கோடி டொலர் கூட்டு முதலீட்டு நிதியம் அமைப்பதற்கான ஒப்பந்தமும் கையெழுத்தாகிறது.

28ம் திகதி, ரியாத் நகரில், சவூதி வர்த்தக ஆணைக்குழுவின் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன்சிங் உரையாற்றுகிறார். மறுநாள் (மார்ச் 1) சவுரா ஆணைக்குழுக் கூட்டத்தில் உரையாற்றுகிறார். அன்று மாலை தனது 3 நாள் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு டில்லி திரும்புகிறார். கடந்த 28 ஆண்டுகளில், இந்திய பிரதமர் ஒருவர் சவூதி அரேபியா செல்வது இதுவே முதற் தடவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# இந்தியா – இஸ்ரேல்

# பொருளாதார வர்த்தக உறவு அதிகரிப்பு

இரு தரப்பு வர்த்தக உறவுகளை மேம்படுத்தத் தொழில்நுட்பச் சிந்தனையாளர்களைக் கொண்ட பேரவையை அமைக்கலாம் என்ற இந்திய யோசனையை இஸ்ரேல் வரவேற்றுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள வர்த்தக உறவுகளை மேலும் விரிவுபடுத்தவும் வலுப்படுத்தவும் இது மிகவும் உதவியாக இருக்கும் என்று இஸ்ரேல் கருதுகிறது.

இந்தியாவால் விரும்பப்படும் நாடுகளில் ஒன்றாக இஸ்ரேல் ஆகிவருகிறது. இஸ்ரேலின் தொழில்நுட்ப அறிவும் அனுபவமும் இந்தியாவின் பல பிரச்னைகளுக்குத்தீர்வு காண உதவும் என்று உணரப்பட்டிருக்கிறது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பை வளர்ப்பது குறித்த பேச்சை இந்திய தொழில், வர்த்தக இணை அமைச்சர் ஜோதிர் ஆதித்ய சிந்தியா இஸ்ரேலில் கடந்த புதன் கிழமை தொடங்கினார்.

இஸ்ரேல் நாட்டின் தொழில், வர்த்தகம், தொழிலாளர் நலத்துறை அமைச்சரான பெஞ்சமின் பென் இலிசருடன் சிந்தியா பேசினார். அப்போது இருநாடுகளும் கூட்டாக ஒத்துழைப்பதற்கான துறைகளைப்பட்டியலிட்டார். வேளாண்மை, பாசன மேம்பாடு, கால்நடை வளர்ப்பு, உள்நாட்டுப் பாதுகாப்பு உள்ளிட்ட பல முக்கிய துறைகளில் இரு நாடுகளும் தங்களுடைய அனுபவங்களையும் தொழில்நுட்பங்களையும் பகிர்ந்து கொள்ள முடியும் என்று அடையாளம் காணப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையில் இப்போதுள்ள வேண்டப்பட்ட நாடு என்ற நிலையிலிருந்து வரியற்ற வர்த்தக உறவு நாடுகளாக நிலையை உயர்த்த உடன்பாடு காண வேண்டும் என்று இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர். அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை இருதரப்பும் விரைவில் எடுக்க வேண்டும் என்று இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர். கடந்த மாதம் டில்லிக்கு சென்றிருந்த பெஞ்சமின் பென் எலிசர் இந்த உடன்பாடு குறித்து இந்தியத் தலைவர்களிடம் வலியுறுத்தியிருந்தார்.

1992ல் இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக நடவடிக்கைகள் 20 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது. இப்போதோ 400 கோடி டொலர்களாக அதிகரித்துவிட்டது. 2015ல் இது 1,200 கோடி டொலர்களாக உயர்ந்துவிடும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

# மாவோயிஸ்டுகள், 72 நாள் போர் நிறுத்தம் நிபந்தனைகளை ஏற்க சிதம்பரம் மறுப்பு



மாவோயிஸ்டுகள் 72 மணி நேரம் வன்முறையில் ஈடுபடாமல் இருந்தால், அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கடந்த வாரம் தெரிவித்து இருந்தார். இதற்கு மாவோயிஸ்டு தலைவர் கோடீஸ்வர் ராவ் என்ற கிஷன்ஜி பதில் அளித்து, தற்காலிக போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது:- இது 72 மணி நேர பிரச்சினை அல்ல. இந்த பிரச்சினையைத் தீர்க்க 72 நாட்கள் ஆகும். எனவே, 25ம் திகதி முதல் 72 நாட்கள் நாங்கள் போர் நிறுத்தத்தில் ஈடுபட தயார். ஆனால், மாவோயிஸ்டுகளுக்கு எதிராக மத்திய, மாநில அரசுகள் நடத்தி வரும் தேடுதல் வேட்டை நிறுத்தப்பட வேண்டும். அதற்கு பதிலாக, பழங்குடியின பகுதிகளில் மேம்பாட்டு பணிகளில் கவனம் செலுத்த வேண்டும். மாவோயிஸ்டு தேடுதல் வேட்டை என்ற பெயரில், அப்பாவி மக்கள் மீதான இடைவிடாத வன்முறையை நிறுத்த வேண்டும். அப்படி செய்தால் நாங்கள் வரவேற்போம். அரச பயங்கரவாதம் எவ்வளவுக்கு எவ்வளவு நிற்கிறதோ, அவ்வளவுக்கு நாங்களும் வன்முறையை நிறுத்துவோம். இதற்கு அரசுதான் முன்முயற்சி எடுக்க வேண்டும். மத்திய அரசுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தையில், அறிவிஜீவிகள், மனித உரிமை அமைப்புகள், மக்கள் அமைப்புகள் ஆகியவை மத்தியஸ்தராக செயல்பட வேண்டும்என்று கிஷன்ஜி கூறினார்.

ஆனால், மாவோயிஸ்ட்டுகள் அரசுக்கு நிபந்தனைகள் விதிப்பதை ஏற்க முடியாது என்றும், பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர் அவர்கள் வன்முறையைக் கைவிட வேண்டும் என்றும் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

ப.சிதம்பரம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பேச்சுவார்த்தைக்கு முன்னதாக மாவோயிஸ்டுகள் வன்முறையைக் கைவிட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். மேலும், மாவோயிஸ்டுகள் நிபந்தனைகளை விதிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார். வன்முறையை கைவிடுவதாகவும் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்றும் மாவோயிஸ்ட் தலைவர்கள் தெளிவாக அறிவித்த பின்னரே, பிரதமர் மற்றும் அமைச்சரவையுடன் ஆலோசித்துத் தான் உரிய பதிலை அளிக்க முடியும் என்றும் ப.சிதம்பரம் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.